# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 58/மா/2023**

**நாள்: 27.03.2023**

திரு. T. ராமகிருஷ்ணன்,
திண்டுக்கல் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல். – எதிர்மனுதாரர்

திண்டுக்கல் ரவுண்டு ரோடு புதூர், கதவு எண்.16/22 என்ற முகவரியில் வசிக்கும் திரு. T.ராமகிருஷ்ணன் என்பவரின் 02.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2023–ல் பெறப்பட்டு 58/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திண்டுக்கல் ரவுண்டு ரோடு புதூர், கதவு எண்.16/22 என்ற முகவரியில் வசிக்கும் திரு. T.ராமகிருஷ்ணன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 02.03.2023 நாளிட்ட தனது மனுவில்:

"மனுதாரர் தனது சொத்து வரி, குடிநீர் வரி பெயர் மாற்றம் செய்து 28.03.2022ல் வழங்கப்பட்டது என்றும் ஆனால் கணினியில் இன்றுவரை பெயர்மாற்றம் செய்யவில்லை. பெயர் மாற்றம் செய்து சொத்து வரி செலுத்த அனுமதி வழங்க கோரி தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 15.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

3) திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 15.03.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மனுதாரரின் மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரது சொத்து வரி இவ்வலுவலக செயல்முறைகள் 078/DG12/21–22/006368 நாள் 25.03.2022ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது குறித்த பதில் 28.03.2022 நாளிட்ட கடிதத்தின் மூலம் உள்ளாட்சி நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 15.03.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் தனது கோரிக்கையான கணினியில் பெயர் மாற்றம் செய்த உத்திரவு நகல் 16.03.2023 அன்று தனக்கு வழங்கப்பட்டதால், 20.03.2023ல் நேரடி விசாரணையில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கேட்டு 16.03.2023 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார்.

6) திண்டுக்கல் மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர் இருவரும் 20.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :

" திண்டுக்கல் மாநகராட்சி வார்டு எண்.32, கதவு எண்.16/22, ரவுண்ட் ரோடு என்கின்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் தனது வீட்டிற்கான வரி ரசீதில் (வரி விதிப்பு எண்.078/031/00404 ) உள்ள தமிலுதீன் என்கின்ற பெயரிலிருந்த தனது பெயரான திராமகிருஷ்ணன் என்கின்ற பெயருக்கு வரிவிதிப்பை மாற்றக்கோரி 25.03.2022ல் அளித்திருந்த விண்ணப்பத்தையொட்டி, அவருக்கு 28.03.2022 அன்று வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை தெரிவித்து அதன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும் திண்டுக்கல் மாநகராட்சியில் உள்ள சர்வரில் 01.04.2022 முதல் 31.10.2022 வரை ஏற்பட்ட தொழில் நுட்பக்கோளாறு காரணமாக மேற்கண்ட பெயர் மாற்றத்தை கணினியில் பதிவு செய்ய இயலவில்லை எனவும் மேற்கண்ட பெயர் மாற்றம் 16.03.2023 அன்று கணினியில் பதிவு செய்யப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்"

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி வருவாய் ஆய்வாளர், வருவாய் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியமுடிகிறது.

மனுதாரர் தனது வீட்டின் சொத்து வரி, குடிநீர் வரி ரசீதில் பெயர் மாற்றம் செய்து 28.03.2022ல் வழங்கப்பட்டது எனவும் கணினியில் இதுநாள் வரை பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றும் ஆகவே கணினியில் பெயர் மாற்றம் செய்து தர இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டபடி மேற்கண்ட பெயர் மாற்றம் 16.03.2023 அன்று கணினியில் பதிவு செய்யப்பட்டதை மாநகராட்சி ஆணையர் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும் குறிப்பாக:-

பிரிவு '7' The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c ) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மனுதாரருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் 28.03.2022 அன்று செய்யப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாநகராட்சியில் உள்ள சர்வரில் 01.04.2022 முதல் 31.10.2022 வரை ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறு காரணமாக மேற்கண்ட சொத்துவரி பெயர் மாற்றம் கணினியில் பதிவு செய்ய இயலவில்லை. 16.03.2023 அன்று தான் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1.4.2022 அன்று தான் சர்வரில் கோளாறு ஏற்பட்டுள்ளது. எனவே 25.03.2022ல் பெறப்பட்ட விண்ணப்பம் 28.03.2022ல் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், கணினியிலும்

சொத்துவரி பெயர் மாற்றம் செய்து மனுதாரருக்கும் வழங்கியிருக்கலாம். மேலும் 31.10.2022 வரை தொழில் நுட்ப கோளாறு இருந்தாலும் அதற்கு பின்னராவது உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடவேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஆனால் இம்முறைமன்ற நடுவத்தை நாடிய பிறகே மேற்கண்ட பெயர் மாற்றம் திண்டுக்கல் மாநகராட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது. இந்த பெயர் மாற்ற காலதாமதத்திற்கு பொறுப்பான சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது. இனி வரும் காலங்களில் இதுபோன்ற கால தாமதங்களையும், தவறுகளையும் தடுக்க சம்பந்தப்பட்ட அலுவலருக்கு உரிய அறிவுரைகள் வழங்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடப்படுகிறது.

மேலும் மனுதாரர் தம்மால் அளிக்கப்படும் புகார் மனுக்கள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் மேற்கொள்ளப்படும் நேரடி விசாரணையில் இனிவருங்காலங்களில் தவறாது நேரில் ஆஜராகுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்.

2023-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. T. ராமகிருஷ்ணன்,
த/பெ. திருவேங்கடம்,
16/22, ரவுண்டு ரோடு புதூர்,
திண்டுக்கல் –5.

2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

4) இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக